செ.வெ.எண்: 527 நாள்: 15.08.2019

# புதுக்கோட்டை மாவட்டத்தில் சுதந்திர தினவிழாவை முன்னிட்டு சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் சுதந்திர தினவிழாவை முன்னிட்டு திருவப்பூர் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் திருக்கோயிலில் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் இன்று (15.08.2019) நடைபெற்றது.

நாடு முழுவதும் சுதந்திர தினவிழா கொண்டாடப்படுவதையொட்டி இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் தமிழகத்தில் உள்ள அனைத்து திருக்கோயில்களிலும் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நடைபெறுகிறது. ஏற்றதாழ்வுகளை தவிர்த்து அனைவரும் சமம் என்ற நிலைபாட்டிற்கு வழுசேர்க்கும் வகையில் இது போன்ற பொது விருந்து நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்று வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் இன்றைய தினம் இந்து அறநிலையத்துறையின் கட்டுபாட்டில் உள்ள 22 கோவில்களில் பொது மக்கள் பங்கேற்கும் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அந்த வகையில் திருவப்பூர் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் திருக்கோவிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும்

பொது விருந்து நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் பாலசுப்பிரமணியன், வட்டாட்சியர் பரணி மற்றும் பொது மக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**